**INSTITUTE FOR HEALTH POLICY**

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**

திகதி : 11 November 2024
நேரம் : 02:00 PM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info 'at' ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi 'at' ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya


## ஜனாதிபதி அனுர திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரின் தேர்தலுக்கு பின்னரான சாதகத்தன்மை மதிப்பீடுகளில் ஓர் உயர்வு

IHP SLOTSன் தேர்தலுக்கு பின்னரான கருத்துக்கணிப்புகளின் பிரகாரம், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் நிகர சாதகத்தன்மை மதிப்பீடுகள் முறையே +42% மற்றும் +40% என்று அதிகரித்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது. தேர்தலுக்கு முன் இருந்த -10% இல் இருந்து மதிப்பீடுகள் உயர்ந்துள்ளன. தேர்தலுக்கு பின்னர் பதிலளித்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இரு தலைவர்கள் தொடர்பில் சாதகமான கருத்துக்களை தெரிவித்தனர்.

இருப்பினும், SLOTS தொடர்ந்த பிற அரசியல்வாதிகள் அனைவரும் மறைகணிய நிகர சாதகத்தன்மை மதிப்பீடுகளைக்(35% க்குக் கீழ்) கொண்டிருங்ந்தனர். பதிலளித்தவர்களில் 50% க்கும் அதிகமானோர் இவர்கள் மீது சாதகமற்ற அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். இவர்களில் மிகக் குறைவான சாதகமற்ற சதவிகிதத்துடன் ரணில் விக்ரமசிங்க (-37%) இருக்க, சஜித் பிரேமதாச (-43 %) அவரைப் பின்தொடர்ந்தார்.

இந்த ஆண்டு, IHP, தற்சமயம் அரசியலில் உள்ள முக்கிய அரசியல்வாதிகள் 20 பேரினை தனது கருத்துக்கணிப்பின் மூலம் தீவிரமாக தொடர்ந்தது. இதில் சமீபத்திய ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள், முக்கிய கட்சித் தலைவர்கள், தற்போதைய மற்றும் சமீபத்திய சுகாதார அமைச்சர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்குவர். நோக்கம் முழுமையான பட்டியல் அல்ல, மேலும் இவர்களைவிட பிரபலமான அரசியல் பிரமுகர்கள் கருத்துக்கணிப்பில் சேர்க்கப்படாமலும் இருக்கலாம். சாதகத்தன்மை மதிப்பீடுகள் வயது, பாலினம், இனம்,

மாகாணம், வருமான தரவரிசை, கல்வி மற்றும் துறையின்படி தேசிய மக்கள் தொகையுடன் பொருந்துமாறு எடையிடப்பட்டுள்ளன.




## முழு அறிக்கை

Institute for Health Policy, November 2024, “Pres. Anura Dissanayake and Prime Minister Harini Amarasuriya see surge in favourability ratings post-election” *Available at :* https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202417.pdf

## முந்தைய அறிக்கைகள் ihp.lkவில் இருந்து கிடைக்கும்

Institute for Health Policy, October 2024, “Harini Amarasuriya a popular choice for Prime Minister” *Available at :* https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202414.pdf

Institute for Health Policy, March 2023, “Public continue to hold deeply unfavourable views of almost all politicians across all parties”, SLOTS Report #2023-07. *Available at* *https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202307.pdf*

Institute for Health Policy, April 2022, “Economic crisis results in growing public disaffection with politicians, but particularly with President Rajapaksa”, SLOTS Report #2022-04. *Available at: https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202204.pdf*

## IHP பற்றி

இந்த கருத்துக்கணிப்பை ஆணையிடுவதற்கும் வடிவமைக்ககவும் IHP மட்டுமே பொறுப்பு, மேலும் இதற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு, இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் மூன்று தசாப்தங்களாக பல கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்க்கப்பட்ட கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தோரின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைபடி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்து மற்றவர்களையும் SLOTS ஆய்வு செய்கின்றது. பதிலளிப்பவர்களிடம் ஒரு பொது நபர் அல்லது நிறுவனம் பற்றி அவர்களுக்கு சாதகமான அபிப்பிராயம் உள்ளதா அல்லது சாதகமற்ற அபிப்பிராயம் உள்ளதா என்று கேட்பதன்மூலம் □□□□□ சாதகத்தன்மையை கணக்கிடுகின்றது: நேர்கணிய(+100) மற்றும் நிறைகணிய(-100) பதில்களின் சராசரியே நிகர சாதகத்தன்மை சதவிகிதம் ஆகும். தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், துறை, இனக்குழு, மதம், கல்விதகைமை மற்றும் சமூகபொருளாதார நிலை மற்றும் இடம் இவற்றுடன் மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் எடையிடப்பட்டன.

## நிதியுதவி

IHP, இலங்கையின் சுகாதாரம், சமூக நிலைமைகள் மற்றும் மக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை கணிப்பதற்காக SLOTS கருத்துக்கணிப்பை நடத்துகின்றது. கருத்துக்கணிப்பை உருவாக்க, ஆணையிட மற்றும் வடிவமைக்க IHP மட்டுமே பொறுப்பாகும், மேலும் அதற்கான முழுப் பொறுப்பையும் IHP ஏற்றுக்கொள்கின்றது. பேட்டிகள், IHP ஊழியர்களால் தினமும் தொலைபேசியினுடாக நடத்தப்படுகின்றன. இது தேசிய கள ஆய்வு மூலம் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது எழுமாறாக தொடர்புகொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கிய பதிலளிப்பவர்களுடன் நடாத்தப்படுகின்றது. SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்படுகின்றது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam Trust) , ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission) , ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute), யு .எஸ். எயிட் (USAID) வேலக்ஸ் ஸ்டிப்டங் அறக்கட்டளை(Velux Stiftung Foundation), அபுதாபி நியூயார்க் பல்கலைக்கழகம் (New York University Abu Dhabi) மற்றும் IHP பொது நலன் ஆராய்ச்சி நிதி ஆகியன நிதியளித்துள்ளன. மேலும் ஆய்வின் முடிவுகள், தற்போதைய மற்றும் முந்தைய நிதியுதவியாளர்களின் கருத்துக்கள் அல்லது நிலைகளை பிரதிபலிப்பதில்லை. மேலும் விரிவான தரவு மற்றும் முடிவுகளைப் பெற விரும்புவோர் IHP நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்.